மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம். தலைவர் அவர்களே, அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

திருமயம் தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள்

*1689 திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதியில், சிறுதொழில் மானியக்கடன், அரசு நிலங்களைக் கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தைப்பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் இலவசமாக அமைக்கத் திட்டம் ஏதுமில்லை. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமும், சிறு தொழில் மானியத்துடன் அரசு நிலங்களை கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டமும் எதுவுமில்லை. இருப்பினும் விவசாயிகள் சங்கம் அமைத்து, நிதி வசதி பெற்று வேளாண்மைப் பொறியியல் துறையை அணுகினால், விசைத்துளைக்கருவி குறைந்த வாடகைக்கு வழங்கிப் பணியை செய்து கொடுக்க இயலும்.

திரு. ஆலவயல் சுப்பையா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் டி. பி. ஏ. பி. திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் நிறைய ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. ஆனால், தற்சமயம் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவதை மத்திய அரசு தடை செய்வதாகச் சொல்கிறார்கள். சாதாரண கிணறுகள் மட்டுமே அமைக்கப்படுகின்றன. நிலத்தடி நீர் மிகவும் ஆழத்திற்குப் போய் விட்டமையாலும், கிணறு வெட்டிப் பயன் இல்லை என்பதாலும், மீண்டும் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடும் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி

*6499 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, எங்கு தொடங்கப்படும் ?

1990 மார்ச் 21]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9-40 மணி

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்கு முன்பு கேரளாவின் நெற்களஞ்சிய மாகக் கருதப்பட்டு, நாஞ்சில்நாடு என்ற பெருமையோடு அழைக் கப்பட்டு விவசாயத்தையே நம்பியிருக்கின்ற எங்கள் மாவட்டத் தில் அரசுக் கல்லூரி இல்லாத குறையினைப் போக்கவும், பொரு ளாதாரத் துறையில் பெருமைத் தேடித் தந்த ஆராயச்சிப் பண் ணையான திருப்புவிசாலப் பண்ணையை 'டி.பி.எஸ். 1, டி.பி. எஸ். 2' போன்ற உயர் ரக விதைகளை உருவாக்குகின்ற இடத் தில் போதிய தண்ணீர் வசதியிருந்தும் போதிய இடவசதியிருந்தும் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி யில் எங்கள் மாவட்டத்தை புறக்கணிக்காமல், இந்த நிதி ஆண்டிலேயே, ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகத்தின் கீழ் தற்போது கோயம்புத்தூரில், மதுரை, கிள்ளிக்குளம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மூன்று இடங் களிலும், 1989 ஆம் ஆண்டில், திருச்சி மாவட்டத்தில் குமலூர் கிராமத்திலும், புதிதாகத் துவங்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரி யையும் சேர்த்து மொத்தம் நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அதற்குமேல் இந்த ஆண்டு ஆரம்பிப்ப தற்கு அரசாங்கத்திடம் உத்தேசம் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஆரம்பிப்பதற் குச் சில ஆண்டுகளுக்கு முன்பு இடமே பார்க்கப்பட்டது. தடிக் காரன் கோணம் என்ற இடத்தையும், புளியூர்குறிச்சிக் கோட் டைக்குள் இருக்கின்ற 90 ஏக்கர் நிலத்தையும் அரசின் சார்பிலே வந்து பார்த்துச் சென்றதாக எனக்கு நல்ல நினைவு இருக்கிறது. எனவே, திருப்பதிசாரத்திலே ஆய்வில் கிடக்கின்ற அந்தப் பலன் களையெல்லாம், முடிவுகளையெல்லாம், நல்லமுறையிலே பயன் படுத்தி, நல்ல விளைவுகளைக் காணவேண்டும் என்று சொன் னால், அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலே, இந்த விவசாயக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையிலே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கீழும், வேளாண்மைக் கல்லூரி ஒன்று செயல்பட்டு வருகிறது. ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கவேண்டுமானால், ஐந்து ஆண்டுக்கு மொத்தச் செலவு 27 கோடி ரூபாய் தேவைப்படும். அதுவும், இப்பொழுது உள்ள சூழ்நிலையில் வேளாண்மைப் பட்டம் படித்த பட்டதாரிகள் 1,300-க்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க இயலுமா என்பதை வருங்காலத்தில் யோசிக்கலாம்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு, தற்போது நடந்து வரும் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் ஆராய்ச்சி நிலையம், நல்ல மண் வளம், பல்கலைக் கழகம் அமைக்க கட்டிடம், போதுமான இடம் உள்ள காரணத்தினால், அதோடு இக்கல்லூரி வெள்ளி விழாக் காணும் மகிழ்ச்சிகரமான இவ்வாண்டில், மதுரை வேளாண்மை பல்கலைக் கழகம் அமைக்க கழக அரசு நடவடிக்கை எடுக்குமா என அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்கும்.

குந்தா அணைத் தண்ணீர்

*2033 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அவினாசி, பல்லடம் தொகுதி விவசாயிகளுக்கு குந்தா அணையில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு திட்டம் வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இல்லை.